ප්‍රජා පාදක විශෝධන දෙපාර්තමේන්තුව
சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம்
**Department of Community Based Corrections**

# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# Annual Performance Report

# 2025

# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# Annual Performance Report

# 2025

## ප්‍රජා පාදක විශෝධන දෙපාර්තමේන්තුව
## சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம்
## Department of Community Based Corrections


15 වැනි මහල
“මෙහෙවර පියෙස”
නාරාහේන්පිට
කොළඹ-05

**15 ஆவது மாடி**
**“மெஹெவர பியெஸ”**
**நாராஹேன்பிட்டி**
**கொழும்பு- 05**

**15th floor**
**“Mehewara Piyasa”**
**Narahenpita**
**Colombo- 05**

**011-2683691**
**www.dcbc.gov.lk**
dcbcorrection@gmail.com

**ஆணையாளரின் கூற்று**



குற்ற உணர்ச்சியிலிருந்து விடுபட்டு ஒரு நல்ல மனிதனை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட சமுதாயஞ் சார் சீர்திருத்த திணைக்களம் 1999 ஆம்ஆண்டின் 46 ஆம் இலக்க சமுதாயஞ் சார் சீர்திருத்தச் சட்டத்தால் நிறுவப்பட்ட ஒரு அரச நிறுவனம் ஆகும்.

2025 ஆம் ஆண்டில் 19203 கட்டளையாளர்கள் சமூகத்திருத்தச் செயல்முறைக்காக நீதிமன்றத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ளதோடு *2025*ம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளில் இருந்து கொண்டுவரப்பட்ட *27610* கட்டளையாளர்கள் தொடர்பாக திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சிறைச்சாலை நெரிசலுக்கு மாற்றீடாக நிறுவப்பட்ட இந்த திணைக்களத்திற்கு நீதிமன்றத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ள கட்டளையாளர்களில், கட்டளையை மீறுவதை குறைந்த மட்டத்தில் வைத்துக்கொள்ளவும் தொடர்புடைய உத்தரவுகாலத்திற்குள் அவர்கள் மற்றொரு குற்றத்தைச் செய்யாமல் தடுக்கவும் எமது உத்தியோகத்தர்களால் இயலுமானது.

நீதிமன்றத்தால் பெறப்பட்ட கட்டளையாளர்களில் 81% கட்டளையாளர்கள் போதைப்பொருள் சட்ட விரோத மது தொடர்பான குற்றவாளிகள் என்பதோடு அதற்கு மேலதிகமாக சூது, களவு, போக்குவரத்து குற்றங்கள், வீட்டு வன்முறைகள்,சூழல் தொடர்பான குற்றங்கள் போன்றவைகளுக்கும் சமுதாயஞ;சார் சீர்திருத்த கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன.

விசேடமாக மது மற்றும் போதைப்பொருள் தொடர்பான கட்டளையாளர்களுக்கு சீர்திருத்த கட்டளையை நடைமுறைப்படுத்தும் போது ASSIST பரிசீலனை செய்யப்படுவதுடன் அனைத்து கட்டளையாளர்களுக்கும் அணுகுமுறை மற்றும் ஆளுமை மேம்பாடு நிகழ்ச்சிகள் , போதைப்பொருள் சிகிச்சை, ஆலோசனை , தொழில் முறை பயிற்சி, சுய தொழில், தொழில் பெற்றுக் கொடுத்தல் போன்றன தொடர்பாக கவனம் செலுத்துவதுடன், புதிய உலக போக்குகளுக்கு அமைவாக விளையாட்டு செயற்பாடுகள்,கலைகள், சான்று அடிப்படையிலான சிகிச்சை முறை என்பனவும் பயன்படுத்தப்படுகின்றன.

சீர்திருத்தச் செயற்பாடுகள் எமது திணைக்களத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் மனநல சுகாதார நிறுவனம், பொலிஸ் திணைக்களம், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை, தொழிற் பயிற்சி நிறுவனங்கள் போன்ற அரசாங்க மற்றும் அரச சார்பற்ற பல்வேறு நிறுவனங்களின் வள பங்களிப்பு மற்றும் தலையீடு என்பவற்றை பெற்றுக் கொள்வதனால் செயற்திறனை அதிகரிக்க உதவுகின்றது.

மேலும் விசேடமாக இவ்வருடத்தில் விளையாட்டு அமைச்சு, சமூக பொலிஸ் பிரிவு என்பவற்றுடன் தொடர்பு பட்டு புதிய பாதையில் செல்ல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. திணைக்கள உத்தியோகத்தர்களின் திறன் மேம்பாட்டிற்காக ஆலோசனை, சீர்திருத்த மற்றும் சமூக வேலை தொடர்பான அறிவை மேம்படுத்த வருடம் முழுவதும் செயலமர்வுகள் நடத்தப்பட்டன. திணைக்கள உத்தியோகத்தர்களின் உந்துதலுக்காக முதல் கட்டமாக அலுவலக முகாமைத்துவ மதிப்பீட்டு நிகழ்ச்சியொன்று சப்ரகமுவ, ஊவா மற்றும் மத்திய மாகாணங்கள் மூன்றிலும் *2025*ம ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் *2026* ம் ஆண்டில் மேல் மற்றும் தென் மாகாணங்களில் செயற்படுத்த எதிர்பாக்கப்படுகிறது.

அதற்கு மேலதிகமாக திணைக்களத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட இளம் கட்டளையாளர்களை தொழிற்பயிற்சிகளுக்கு பரிந்துரைப்பதோடு மற்றும் தொழிலுக்குட்படுத்துவதோடு வெற்றிகரமாக சீர்திருத்தப்பட்டவர்களுக்காக சுயதொழில் நன்கொடை, அவசர நிவாரணம்,பிள்ளைகளுக்காக கல்வி நன்கொடை வழங்குதல் நடைபெறுகின்றன.

திலான் குணரத்தன

ஆணையாளர்

சமுதாயம் சார் சீர்திருத்த திணைக்களம்

2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

சமுதாயம் சார் சீர்திருத்த திணைக்களம்

செலவீனத் தலைப்பு இலக்கம் *326*

**உள்ளடக்கம்**


அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விபரம்/செயற்படுத்தல் சுருக்கம்

அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

அத்தியாயம் 04 - செயலாற்றுகை சுட்டிகள்

அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

அத்தியாயம் 06 - மனிதவள விபரம்

அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை

**பொருளடக்கம்**


**அத்தியாயம் 01 - நிறவனத்தின் விபரம் .................................................................. 01**
1.1 அறிமுகம் ......................................................................................................... 01
1.2 திணைக்களத்தின் நோக்கம் மற்றும் பணிக் கூற்று ............................................ 01
1.3 பிரதான கடமைகள் ........................................................................................... 02
1.4 நிர்வாக கட்டமைப்பு ........................................................................................ 03
**அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்..........................04**
2.1 செயற்திறன் அறிக்கை ..................................................................................... 04
**2.2** அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம் (2025.01.01 திகதி முதல் 2025.12.31 வரை)…..09
2.3 ஐக்கிய நாடுகள் தாபனத்தின் போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான நிறுவனத்தின் (ருமேுனுஊ) மூலம் சமுதாயம் சார் சீர்திருத்தம் தொடர்பாக கௌரவ நீதிபதிகளின் தெளிவூட்டலை விருத்தி செய்தல்…........................10
2.4 இலக்கு ................................................................................................. …12
**அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை…………..13**
3.1 2025 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை கூற்று…13
3.2 நிதி நிலைமைக் கூற்று......................................................................................14
3.3 2025 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று............................... 15
3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்..................................................................…16
3.5 வருமான அறவீட்டு முன்னேற்றம் ...................................................................... **17**
3.6 ஒதுக்கீட்டு பயன்பாட்டு செயன்முறை (ரூபா.000) ............................................... 17
3.7 நி.கூ208ன் படி மற்றொரு அமைச்சின் திணைக்களத்தின் முகவராக இத் திணைக்களத்திற்கு ஒதுக்கீடு வழுங்கப்பட்டது......................................................... 18
3.8 நிதி அல்லாத சொத்துக்களின் முன்னேற்ற அறிக்கை ....................................... 18
3.9 கணக்காய்வாளர் நாயத்தின் அறிக்கை ............................................................... 19
**அத்தியாயம் 04 - செயலாற்றுகைசுட்டிகள்..................................................................26**
4.1 நிறுவன செயற்திறன் குறிகாட்டிகள் (செயற்திட்டத்திற்கமைய) ........................ 26
**அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை .........................................................................................27**
5.1 அடையாளம் காணப்பட்ட அந்தந்த நிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்கினை குறிப்பிடல்.......................................................................................................27
**அத்தியாயம் 06 - மனித வள விபரம் ..........................................................................28**
6.1 முகாமைத்துவ கட்டமைப்பு ............................................................................... 28
6.2 அலுவலக உத்தியோகத்தர்கள் ......................................................................... 28
6.3 திணைக்களத்தின் செயலாற்றுகைக்கு மனிதவளப் பற்றாக்குறை ஏற்படுத்தும் தாக்கம் ……………………………………………………………………………….29
6.4 மனித வள அபிவிருத்தி ...................................................................................... **30**
**அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை ..........................................................................31**

# அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விபரம்/செயற்படுத்தல் சுருக்கம்

## 1.1 அறிமுகம்

1999 வருடத்தின் நீதி அமைச்சின் கீழ் ஒரு செயற்திட்டமாக இலங்கையில் சமுதாயஞ்சார் சீர்திருத்தம் ஆரம்பிக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டத்தின் கீழ் 3 நீதிமன்றங்களில் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்திட்டம் இலங்கை முழுவதும் இது வரை நீதவான் நீதிமன்றம் மற்றும் சுற்றுலா நீதிமன்றம் அடங்களாக 125 நீதிமன்றங்களில் சமுதாயஞ்சார் சீர்திருத்தம் இயங்கி வருகின்றது. சிறு குற்றங்கள் புரிபவர்களை சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்துவதன் மூலம் சிறு குற்றங்களை புரியும் தவறாளர் ஒருவர் சிறைச்சாலை செல்வதை தடுப்பதோடு சிறைச்சாலைகளில் உள்ள சன நெருக்கடியை குறைக்கவும் முடியும். இதனால் அரசுக்கு ஏற்படும் செலவுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. மற்றும் அவர்கள் சிறைச்சாலைகளில் உள்ள பாரிய குற்றவாளிகளுடன் தொடர்பு கொள்வதால் பெரும் தவறுகள் செய்வதற்கு வாய்ப்பாக அமையும். எனவே அவர்களை குற்ற செயல்களில் ஈடுபடாமல் தடுப்பதற்கு புனர்வாழ்வு நிகழ்ச்சிகளுக்கு உட்படுத்த வேண்டிவரும்.

நீதிமன்றங்கள் மூலம் சிறு குற்றங்கள் புரிபவர்களுக்கு சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்துவதன் மூலம் எதிர்பார்ப்பது நாட்டில் குற்றச் செயற்பாடுகளில் ஈடுபடுவோரை சமூகத்தில் வைத்துக் கொண்டே அவர்களின் குற்ற நடத்தைகளில் இருந்து விடுபடச் செய்து நாட்டிற்கு பிரயோசனம் உள்ள பிரசையாக மாற்ற தேவையான முயற்சிகளை மேற்கொள்வதாகும்.

இதற்காக நீதவான் நீதிமன்றங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் பிராந்திய காரியாலயங்களில் இணைக்கப்பட்டுள்ள திணைக்கள உத்தியோகத்தர்கள் மூலம் பல்வேறு சீர்திருத்த நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்படுகின்றன. உத்தியோகத்தர்களின் கண்காணிப்பில் கீழ் இருக்கும் கட்டளையாளர்களை சரியான பாதையில் கொண்டு செல்வதே திணைக்களத்தின் நோக்கமாகும்.

சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையை நிறைவு செய்த நபர்களின் பின்னூட்டல் செயற்பாட்டை மேற்கொள்வது சமகாலத்தில் முக்கியமான ஒரு விடயமாகும். ஆதலால் இவ் விடயமாக அவதானத்தை செலுத்திய திணைக்களம் முன்னதை விடவும் விரிவாகவும் விரைவாகவும் இச் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது. அதற்கமைய நீதவான் நீதிமன்றங்களில் அமைந்துள்ள பிராந்திய காரியாலயங்களில் இணைக்கப்பட்டுள்ள சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர், வேலை பரிசோதகர்களுக்கு மேலதிகமாக நாட்டிலுள்ள சகல பிரதேச செயலகங்களிலும் சமுதாயஞ்சார் சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களை எமது திணைக்களம் இணைப்பு செய்துள்ளது.

## 1.2 திணைக்களத்தின் நோக்கு, பணிக் கூற்று மற்றும் நோக்கம்

**நோக்கு**

சிறு தவறாளர்கள் மற்றும் தவறுகளுக்கு தூண்டப்படும் நபர்களை சிறந்த பிரசைகளாக உருவாக்குதல்

**பணிக்கூற்று**

பின்னூட்டலுடன் கூடியவினைத்திறனான சமுதாயஞ்சார் சீர்திருத்த செயற்பாட்டின் ஊடாக சிறு தவறாளர்கள் தவறுகளுக்கு தூண்டப்படும் நபர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை பொருளாதார சமூகமற்றும் ஆன்மீகரீதியில் அபிவிருத்தி செய்தல்.

### 1.3 நோக்கம்

1. 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் சிறு குற்றங்களை புரியும் தவறாளர்களை சிறைவாசத்திற்குப் பதில் சமூகத்தில் வைத்தே சீர்திருத்தம் செய்தல்.
2. சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் சிறுகுற்றங்களை புரியும் தவறாளிகள் சிறைச்சாலை செல்வதால் சிறைச்சாலையில் ஏற்படும் சன நெருக்கடியை குறைத்தல் மற்றும் அதனால் ஏற்படும் அரச செலவீனத்தை குறைத்தல்.
3. சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்களின் உழைப்பை தேசத்தின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தல்.
4. சீர்திருத்த கட்டளையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் ஊளவியல்- சமூக பிரச்சினைகளை குறைத்து அவர்களை பொருளாதார ரீதியாக பலப்படுத்தல்.
5. பயனுள்ள சமுதாயஞ்சார் சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் சமூகமயமாக்கப்பட்ட கட்டளையாளர்களை பின்னூட்டம் செய்தல்.

### பிரதான செயற்பாடுகள்

1. நீதவான் நீதிமன்றங்கள் மூலம் சிறு தவறுகளுக்கு தவறாளராக கருதப்படும் ஓர் நபரை சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்குள் உள்வாங்கல்.
2. கட்டளையாளர்களின் ஆன்மீக வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக அதிகமான ஆன்மீக நிகழ்ச்சிகளை தயாரித்து நடாத்துதல்
3. கட்டளையாளர்களின் உளவள மேம்பாட்டிற்காகவும் உளவள ஆலோசனை நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
4. கட்டளையாளர்களின் விசேட திறன்களை கண்டறிந்து அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற சிறந்த தொழில் பயிற்சிகள் மற்றும் தொழிலுக்கமர்த்தல்.
5. கட்டளையாளர்களின் பொருளாதாரத்தை முன்னேற்ற பல்வேறு வகையான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தல்.
6. கட்டளையாளர்கள் போதைப் பொருட் பாவணையில் இருந்து விடுபட மருத்துவ சிகிச்சைக்காக அனுப்புதல்.
7. ஆளுமை மற்றும் அனுகுமுறை வளர்ச்சிக்காக அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

### 1.4 நிர்வாக கட்டமைப்பு



## அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

**2.1** செயற் திறன் அறிக்கை தொடர்பான தகவல்கள்

அ) நீதவான் நீதிமன்றங்களின் மூலம் பெறப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்கள் எண்ணிக்கை மாகாண அடிப்படையில் **(2025.01.01-2025.12.31)**

| **எண்** | **மாகாணம்** | **கட்டளைக்கு உட்பட்டவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 01 | மேற்கு | 6,066 |
| 02 | வடக்கு | 2,674 |
| 03 | தெற்கு | 2,527 |
| 04 | வடமேல் | 1,886 |
| 05 | கிழக்கு | 1,692 |
| 06 | சப்ரகமுவ | 1,579 |
| 07 | மத்திய | 1,226 |
| 08 | ஊவா | 904 |
| 09 | வட மத்திய | 649 |
| | **மொத்தம்** | **19,203** |

ஆ.)நீதவான் நீதிமன்றங்களின் மூலம் பெறப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்கள் எண்ணிக்கை- தவறுகளின் அடிப்படையில் **(2025.01.01-2025.12.31)**

| **எண்** | **குற்றங்கள்** | **கட்டளைக்கு உட்பட்டவர்களின் தொகை** |
|---|---|---|
| 01 | சட்ட விரோத மதுபானம் | 5,850 |
| 02 | ஹெரோயின் | 3,844 |
| 03 | மெதன்பிடமின் (அயிஸ்) | 2,892 |
| 03 | கஞ்சா | 2,260 |
| 04 | போக்குவரத்து குற்றங்கள் | 1,911 |
| 05 | சூது | 638 |
| 06 | போதையில் தவறான முறையில் நடத்தல் | 476 |
| 07 | களவு | 183 |
| 08 | வீட்டு வன்முறை | 124 |
| 09 | பொது அமைதிக்கு பங்கம் விளைவித்தல் | 114 |
| 10 | சுற்றாடல் சார் குற்றங்கள் | 67 |
| 11 | களவாடப்பட்ட பொருட்களை தன்வசம் வைத்திருத்தல் | 39 |
| 12 | சட்ட விரோத ஆயுதங்ளை வைத்திருத்தல் | 18 |
| 13 | மோசடி | 8 |
| 14 | கலவரம் | 8 |
| 15 | வேறு | 771 |
| | **மொத்தம்** | **19,203** |


(நீதவான் நீதிமன்றங்களின் மூலம் பெறப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்கள் எண்ணிக்கை மாகாண அடிப்படையில்
(2025.01.01-2025.12.31)
32%
14%
13%
10%
9%
8%
6%
5%
3%
மேற்கு
வடக்கு
தெற்கு
வடமேல்
கிழக்கு
சப்ரகமுவ
மத்திய
ஊவா
வட மத்திய


நீதவான் நீதிமன்றங்களின் மூலம் பெறப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்கள் எண்ணிக்கை- தவறுகளின் அடிப்படையில்
(2025.01.01-2025.12.31)
7,000
6,000
5,000
4,000
3,000
2,000
1,000
0
சட்ட விரோத மதுபானம்
ஹெரோயின்
:மெதன்பிடமின் (அயிஸ்)
கஞ்சா
போக்குவரத்து குற்றங்கள்
வேறு
சூது
போதையில் தவறான முறையில் நடத்தல்
களவு
வீட்டு வன்முறை
பொது அமைதிக்கு பங்கம் விளைவித்தல்
சுற்றாடல் சார் குற்றங்கள்
களவாடப்பட்ட பொருட்களை தன்வசம் வைத்திருத்தல்

### இ).சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையின் விபரங்கள் (2025.01.01-2025.12.31)

| கிடைக்கப் பெற்ற கட்ளையார்களின் எண்ணிக்கை (a) | கட்டளையை நிறைவேற்றிய கட்டளையாளர்கள் எண்ணிக்கை/ சதவீதம் | | கட்டளையை மீறிய கட்டளையாளர்கள் எண்ணிக்கை/ சதவீதம் | | தற்போது நடைமுறையில் உள்ள கட்டளையின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை (b) | சதவீதம்(b/a%) | எண்ணிக்கை (c ) | சதவீதம் (c/a%) | எண்ணிக்கை (d ) | சதவீதம் (d/a%) |
| 19,203 | 7,482 | 39% | 3120 | 16% | 8,601 | 45% |

- **நடாத்தப்பட்ட சீர்திருத்த நிகழ்ச்சிகளின் விபரம் (2025.01.01 முதல 2025.12.31 வரை)**

| இல | நிகழ்ச்சி | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | ஆலோசனை நிகழ்ச்சி (தனி) | 35,159 | 27,724 |
| 02 | தொழிற்பயிற்சி(தனி) | 247 | 247 |
| 03 | போதை பொருள் தடுப்பு ஆலோசனை நிகழ்ச்சி | 2,627 | 27,956 |
| 04 | தொழிற்பயிற்சி(குழு) | 857 | 5,559 |
| 05 | சமூக சுகாதார நிகழ்ச்சிகள்(வைத்திய/ஆயுர்வேதம்) | 425 | 5,494 |
| 06 | அணுகுமறை மேம்பாட்டு நிகழ்ச்சிகள் | 1,606 | 16,912 |
| 07 | ஆளுமை மேம்பாட்டு நிகழ்ச்சிகள் | 1,168 | 12,023 |
| 08 | மரம் நடுகை நிகழ்ச்சிகள் | 543 | 4,304 |
| 09 | சிரமதான நிகழ்ச்சிகள் | 5,374 | 30,874 |
| 10 | ஆண்மீக மேம்பாட்டு நிகழ்ச்சிகள் | 1,554 | 13,871 |
| 11 | கலை நிகழ்ச்சிகள் நடத்தல் | 330 | 5,644 |
| 12 | விளையாட்டு நிகழ்ச்சிகள் நடத்தல் | 189 | 3,264 |
| 13 | படிமுறை12 நிகழ்ச்சிகள் | 417 | 3,576 |
| 14 | குடும்ப சந்திப்பு நிகழ்ச்சிகள் | 731 | 4,051 |

| | | | |
|---|---|---|---|
| 15 | கட்டளையாளர் குடும்ப உறுப்பினர்களின் நலன்புரியை மேம்படுத்தல்( உணவுப் பொதி,பாடசாலை உபகரணங்கள்,முதியோர்,விசேட தேவையுடவர்களுக்கான | 727 | 1,991 |
| 16 | வீடு மற்றும் வீட்டுச் சூழல் முகாமைத்துவம் பற்றிய பயிற்சி குடும்ப நிதி முகாமைத்துவம் | 1,953 | 6,992 |
| 17 | கட்டளையாளர்களின் வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தல் | 93 | 93 |
| 18 | சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல் சமூகம் சார்ந்த அமைப்புகளின்விழிப்புணர்வு (கிராமஅலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியது) | **2,056** | **61,876** |
| 19 | அரச அதிகாரிகளுக்கான தெளிவூட்டல் நிகழ்ச்சி | **319** | **11,720** |
| 20 | விசேட தின நிகழ்ச்சிகள்(சுதந்திர தினம்,சுற்றாடல் தினம்,முதியோர் தினம் | **313** | **7,147** |

**2025 வருடத்தில் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடை பயன்படுத்தி கட்டளையாளர்களுக்காக நடாத்தப்பட்ட சீர்திருத்த நிகழ்ச்சிகளின் விபரம்**

| இல | நிகழ்ச்சி | செலவுத் தொகை(ரூ) |
|---|---|---|
| 01 | போதை பொருள் தடுப்பு ஆலோசனை நிகழ்ச்சி | 21,020.00 |
| 02 | தொழிற்பயிற்சி | 8,400.00 |
| 03 | சமூக சுகாதார நிகழ்ச்சிகள்(வைத்திய/ஆயுர்வேதம்) | 11,500.00 |
| 04 | ஆண்மீக மேம்பாட்டு நிகழ்ச்சிகள் | 70,600.00 |
| 05 | குடும்ப சந்திப்புகளை நடத்தல் | 201,505.00 |
| 06 | கலை நிகழ்ச்சிகள் நடத்தல் | 229,950.00 |
| 07 | விளையாட்டு நிகழ்ச்சிகள் நடத்தல் | 361,700.00 |
| 08 | அணுகுமறை மேம்பாட்டு நிகழ்ச்சிகள் | 150,350.00 |
| 09 | கட்டளையாளர் குடும்ப உறுப்பினர்களின் நலன்புரியை மேம்படுத்தல் | 35,825.00 |
| 10 | சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல் | 83,650.00 |
| 11 | அரச அதிகாரிகளுக்கான தெளிவூட்டல் நிகழ்ச்சி(பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியது)) நீதிமன்ற உத்தியோகத்தர்கள், சட்டத்தரணிகளுக்கானதெளிவூட்டல் நிகழ்ச்சி | 77,090.00 |
| 12 | மரம் நடுகை நிகழ்ச்சிகள் | 12,350.00 |
| 13 | சிரமதானம் | 71,755.00 |
| 14 | பலகார உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பான புத்தாண்டு சந்தை | 24,486 |
| 15 | விசேட தினம் | 103,290.00 |

## 2.2 அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம் (2025.01.01 திகதி முதல் 2025.12.31 வரை)

- **வெற்றிகரமாக திருத்தப்பட்ட கட்டளையாளர்களுக்கு தனி/குடும்ப வாழ்வாதார அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சுயதொழில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தல்.**

சமூதாயஞ் சார் சீர் திருத்தங்களுக்காக பரிந்துரைக்கப்பட்ட கட்டளையாளர்களில் பெரும்பாலானோர் போதைப்பொருள் அல்லது மது தொடர்பான குற்றவாளிகள் ஆகும், மேலும் அந்த கட்டளையாளர்களை போதைப்பொருள் பாவனையில் இருந்து விடுவித்து அவர்களை நல்ல பிரசைகளாக மீண்டும் சமூகத்தில் இணைக்க சிறப்பு கவனம் செலுத்தி, போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு வெற்றிகரமாக மறுவாழ்வு அளித்து அவர்களை சமூக மற்றும் பொருளாதார ரீதியில் மேம்படுத்துகிறது.இங்கு, அவர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்காக ஒவ்வொருவரின் திறன், விருப்பம், சந்தைக்கு ஏற்ப சுயதொழில் செய்ய வழிகாட்டல் செய்யப்படுகிறது.அதன்படி, போதைக்கு அடிமையான ஒரு நபர் முறையாக ஆலோசனை மற்றும் மருந்து சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்படுகிறார் மற்றும் மருத்துவ ஆலோசனையின்படி தங்கியிருந்து சிகிச்சைபெறல் அல்லது கிளினிக் மூலமான மருத்துவ சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்படுகிறார்.அதே வேளையில், இவர்களுக்கு அவர்களின் குடும்பத்தில் மிகவும் நம்பகமான மற்றும் பாதுகாப்பான சூழலை உருவாக்கி அவர்களை நல்ல மனிதராக சமூகமயமாக்கும் வகையில் குடும்ப மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.சமூக சீர்திருத்த செயல்முறைக்குப் பிறகு, வெற்றிகரமாக சீர்திருத்தப்பட்ட மற்றும் நிரந்தர வருமான இல்லாத இந்த நபர்கள் தொழில்முறை திறன்களைப் பெறுவதற்கு தொழில் பயிற்சி திட்டங்களுக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

சுயதொழில் தொடங்க விருப்பமும் திறனும் உள்ளவர்கள், பிரதேச சமுதாய சீர்திருத்த அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகங்கள் மூலம் முறையாக ஆய்வு செய்யப்பட்டுதகுந்த நபர்கள் கண்டறியப்பட்டு பரிந்துரை செய்யப்படுகின்றனர்.

சுயதொழில் திட்டத்தைத் தொடங்க ஆரம்ப மூலதனத்தைத் திரட்ட முடியாதவர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் அதிகபட்சம் ரூ.*50,000.00* அ உட்பட்டு சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளரின் மூலம் (உபகரணங்கள் அல்லது மூலப்பொருட்களை வாங்குவதற்கு) வழங்கப்படுகின்றது.கட்டளையாளர்களின் உழைப்பை திறம்பட பயன்படுத்துவதற்கு உற்பத்தி திட்டங்களை செயல்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.இதன்படி, *2025*ம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட *6* மில்லியன் ஏற்பாட்டு தொகையில் *93* நபர்களுக்கு அடையாளம் காணப்பட்ட *67* சுயதொழில் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா *4,297,323.00*வழங்கப்பட்டுள்ளது.இதன் கீழ் சுயதொழில் திட்டங்களான கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, அலங்கார மீன் வளர்ப்பு, வெல்டிங் வேலை, மோட்டார் சைக்கிள் பழுது, சிற்றுண்டி உற்பத்தி, வெற்றிலை உற்பத்தி, கொத்தனார் வேலை, மேசன் வேலை, பூக்கன்று உற்பத்தி, காலான் உற்பத்தி, பட்டறை வேலை, நடமாடும் கடைகள், மர வேலை, விளக்குமாறு உற்பத்தி , வர்ணம் தீட்டல், வீட்டுத் தோட்டம்,மீன்பிடி மற்றும் விவசாய பயிர்கள் போன்ற திட்டங்கள் செயலபடுத்தப்பட்டுள்ளன.

- **வசதியற்றவர்கள் என அடையாளம் காணப்பட்ட நபர்களின் குடும்ப நலன்புரியின் கீழ் பிள்ளைகளுக்கு கல்விக்கான உதவி வழங்கள்.**

கட்டளையாளர்களின் குடும்ப உறுப்பினர்களின் நலன்புரியின் கீழ் பிள்ளைகளுக்கு கல்விக்கான உதவி மற்றும் கட்டாய தேவைகளை பூர்த்தி செய்வதற்காக 14 நிகழ்வுகளுக்கு ரூபா 1,690,677.00 வழங்கப்பட்டுள்ளது.

## 2.3 ஐக்கிய நாடுகள் தாபனத்தின் போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான நிறுவனத்தின் (UNODC) மூலம் சமுதாயம் சார் சீர்திருத்தம் தொடர்பாக கௌரவ நீதிபதிகளின் தெளிவூட்டலை விருத்தி செய்தல்.

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான நிறுவனத்தின் (UNODC) மூலம் மேல் மாகாண கௌரவ நீதிபதிகளின் சமுதாயம் சார் சீர்திருத்தம் தொடர்பாக தெளிவூட்டலை விருத்தி செய்தலுக்கான இரண்டாம் கட்ட நிகழ்ச்சி கொழும்பில் நடத்தப்பட்டது. இந் நிகழ்ச்சியில் 35 கௌரவ நீதவான்கள் பங்கேற்றதுடன் சமுதாயம் சார் சீர்திருத்த செயற்பாட்டை மிகவும் பயனுள்ளதாகவும் வினைதிறனாகவும் செயற்படுத்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இந் நிகழ்ச்சியின் வெற்றியாக பங்கேற்ற கௌரவ நீதிபதிகளின் நீதிமன்றங்களில் சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது, தண்டனைக்கு முன்னரான அறிக்கையை பெறல், சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளை தொடர்பாக அவதானித்தல், கட்டளை நிபந்தனைகள் தொடர்பாக கௌரவ நீதிபதிகள் அவதானித்தல் அத்துடன் அக்கட்டளைக்கு ஏற்ப செயற்படுமாறு நீதிமன்றங்களில் கட்டளையாளர்களை தெளிவுபடுத்தல் போன்ற செயற்பாடுகளால் சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைகளின் அளவும் தரமும் முன்னேற்றம் அடைந்துள்ளது.

மேலும் கௌரவ நீதிபதிகளுக்கு தெளிவூட்டல் நிகழ்ச்சிகள் *03* நடத்த திட்டமிடப்பட்டிருந்த போதும் ஐக்கிய அமெரிக்கா ஐக்கிய நாடுகள் தாபனத்திற்கு பணம் வழங்குவதை நிறுத்தியமையால் அந்நிகழ்வுகள் நடைபெறவில்லை. எனினும் *2024* வருடம் கௌரவ நீதிமன்றங்கள் மூலம் வழங்கப்பட்ட கட்டளைகளின் எண்ணிக்கை *15,631* என்பதுடன் *2025*ம் ஆண்டு அது*16,000* ஆக உயரும் என எதிர்பார்க்கப்பட்டது,எனினும் கௌரவ நீதிபதிகளுக்கான தெளிவூட்டளினால் அந்த கட்டளைகளின் எண்ணிக்கை *19,203* ஆக அதிகரித்தது.மேல் மாகாண கட்டளைகளின் எண்ணிக்கை *2024*ம் ஆண்டு *3,740* என்பதுடன் *2025*ம் ஆண்டு *6,066* ஆக உயர்வடைந்தது மொத்த கட்டளைகளின் எண்ணிக்கை உயர்வடைவதற்கு மூல காரணமாகியது.

கௌரவ நீதிபதிகளுக்கான இந்த தெளிவூட்டல் நிகழ்ச்சியின் விரிவுரையானது கௌரவ மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி லங்கா ஜயரத்ன மற்றும் இத்திணைக்கள பிரதி ஆணையாளர் திருமதி ஆஸா ஜயவர்தன அவர்களினாலும் நடத்தப்பட்டது.







**அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம் (2025.01.01 திகதிமுதல் 2025.12.31 வரை)**

| செயற் திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு தொகை (ரூ.) | செலவு செய்யப்பட்ட விடயம் | செலவு(ரூப) | நிதி முன்னேற்றம் (%) | பௌதீக முன்னேற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கட்டளையாளர்களின் எண்ணிக்கை(2025+முன்னைய வருடங்களில் கொண்டுவரப்பட்ட மீதி) | முடிக்கப்பட்ட உத்தரவுகளின் எண்ணிக்கை | வெற்றிகரமாகதிருத்தப்பட்டது | |
| | | | | | | | எண்ணிக்கை | வீதம் |
| குற்றம் சாட்டப்பட்ட சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளையாளர்களை சீர்திருத்தம் செய்தல் | 6,000,000.00 | கட்டளையை நிறைவேற்றல் | | | 27,610 | 12,083 | 1,109 | 23% |
| | | வெற்றிகரமாக திருத்தப்பட்ட கட்டளையாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக அடையாளம் காணப்பட்ட சுயதொழில் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் கட்டளையாளர்களின் குடும்ப நலன்புரியின் கீழ் பிள்ளைகளுக்கு கல்விக்கான உதவி வழங்கள். | 6,000,000.00 | 100% | | | | |

## 2.4 இலக்கு

01. சிறு தவறுகளுக்கு தவறாளராக கருதப்படும் ஒருவர் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உள்வாங்குதல் மற்றும் கட்டளையாளர்களை அதிகரித்துக் கொள்வதற்காக வெற்றிகரமான சீர்திருத்த செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
02. உத்தியோகத்தர்களின் ஆளுமை அபிவிருத்தியை அதிகரித்தல்
    - ❖ சிரேஸ்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் மற்றும் சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர்களுக்கு சமுதாயஞ்சார் சீர்திருத்த செயற்பாடு அதன் புதிய போக்கு தொடர்பாக தெளிவூட்டல்
    - ❖ அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக உள வள ஆலோசனை ,போதைப் பொருள் தடுப்பு,சமூக வேலையின் தலையீடு தொடர்பான பயிற்சிகளை தொடர்ந்தும் வழங்கள்
    - ❖ சகல உத்தியோகத்தர்களுக்கும் கணணி கற்கை நெறியை பூர்த்தியாக பெற்றுக் கொடுத்தல்.
03. மருத்துவ சிகிச்சை முறையை தரப்படுத்தல்
    - ❖ முழு தீவையையும் உள்ளடக்கும் விதமாக மருத்துவ சிகிச்சை முகாம்களை அமைத்தல். (சுகாதார அமைச்சின் வைத்தியசாலைகளின் கீழ்)
04. சிறந்த முறையில் சீர்திருத்தம் செய்த சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்களை சிறந்த சீறு தொழிலாளர்களாக மாற்றுதல்.
05. சமுதாயஞ்சார் சீர்திருத்த செயற்பாட்டை மக்கள் மயப்படுத்துவதற்காக தெளிவுபடுத்தல்களை அதிகப்படுத்தல்.
06. கட்டளையாளர்களின் தகவல்களை முகாமைத்துவம் செய்ய தேவையான தகவல் களஞ்சிய உருவாக்கல்
    - ❖ திணைக்களத்துகக்குரிய வலைதளம் ஒன்றை உருவாக்கி கொண்டு நடத்தல்.
    - ❖ கட்டளையாளர் தொடர்பான தகவல் மேலான்மை அமைப்பை உருவாக்குதல்.
07. சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டத்தில் தேவையான திருத்தங்களை மேற்கொண்டு சமுதாயஞ்சார் சீர்திருத்த செயற்பாட்டை மேலும் விரிவுபடுத்தல்.
08. கட்டளையாளர்களின் அதிகமானவர்கள் மது மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்கள். எனவே இவர்களுக்கே உரிய சிகிச்சை முறையின் மூலம் இவர்களை சீர்திருத்தம் செய்தல் தொடர்பாக கூடிய கவனம் வெலுத்தல்.
09. அபிவிருத்திஉத்தியோகத்தர்கள் ஊடாக சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்களின் பின்னூட்டல் செயற்பாட்டைமென் மேலும் விரிவுபடுத்தல்.
10. கட்டளையார்களை வெற்றிகரமாக சீர்திருத்திய பின் சிறந்த பிரசையாக மாற்றி அவர்களை பொருளாதார ரீதியில் வலுவடையச் செய்ய சுயதொழில் அபிவிருத்தி திட்டத்தை தொடர்ந்தும் செயற்படுத்துதல்.

# அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

## 3.1 2025 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ- எப்

2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2025 | | குறிப்பு | உண்மை நிலை 2025 | உண்மை நிலை 2024 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசீஏ-1 |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 773,129,000 | 603,431,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 382,615 | 1,325,966 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 21,278,262 | 17,316,773 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **794,789,877** | **622,073,740** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **794,789,877** | **622,073,740** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | 0.14 | 62.29 | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **794,789,877** | **622,073,677** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | | |
| 707,000,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 701,059,277 | 532,685,913 | ஏசீஏ-2(ii) |
| 92,800,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 88,025,252 | 86,686,689 | ஏசீஏ-2(ii) |
| 3,000,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 2,325,425 | 2,519,403 | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ-2(ii) |
| 200,000 | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | 20,000 | 65,000 | ஏசீஏ-2(ii) |
| 803,000,000 | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **791,429,953** | **621,957,006** | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 7,500,000 | முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 5,699,437 | 5,985,118 | ஏசீஏ-2(ii) |
| 7,500,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 7,461,706 | 26,450,469 | ஏசீஏ-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசீஏ-2(ii) |
| 3,000,000 | திறன் விருத்தி | 14 | 2,958,883 | 2,989,150 | ஏசீஏ-2(ii) |
| 6,000,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 6,000,000 | 5,000,000 | ஏசீஏ-2(ii) |
| 24,000,000 | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **22,120,026** | **40,424,738** | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 351,358 | 1,232,383 | ஏசீஏ-4 |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 51,778,711 | 27,694,630 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம் | | - | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | **52,130,069** | **28,927,013** | |
| | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | 865,680,049 | 691,308,757 | |
| 827,000,000 | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | **(70,890,172)** | **(69,235,079)** | |
| | **பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி** | | (70,890,172) | (69,235,079) | ஏசீஏ-7 |
| - | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | - | | ஏசீஏ-3 |
| | | | **(70,890,172)** | **(69,235,079)** | |

1

## 3.2 நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ -பீ

2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா | 2024 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 109,891,912 | 83,032,894 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 84,622,058 | 54,121,610 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **194,513,970** | **137,154,504** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 84,438,467 | 53,969,275 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 109,891,912 | 83,032,894 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 183,590 | 152,333 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **194,513,970** | **137,154,503** |

பக்க இலக்கம் 01 முதல் 21 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 22 முதல் 26 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுத் தயாரிப்பானது அரசாங்க நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 அத்துடன் 2025.12.17திகதி 02/ 2025 இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் நடைமுறைகளுக்கு ஏற்ப செயற்படுத்தப்பட்டுள்ளது. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018/ 19ம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) பிரிவிற்கு ஏற்ப நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| ………………………… | ………………………… | ………………………… |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
| பெயர்: | பெயர்: | பெயர் : |
| பதவி: | பதவி : | |
| திகதி: 2026/02/25 | திகதி : 2026/02/23 | திகதி : 2026/02/23 |
| Ayesha Jinasena, P.C.<br>Secretary<br>Ministry of Justice and National Integration<br>No: 19, Sri Sangaraja Mawatha,<br>Colombo 10. | DILAN GUNARATNE<br>Commissioner<br>Department of Community Based Corrections | ஆர்.கல்பணி தரங்கா<br>கணக்காளர்<br>சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம் |

2

## 3.3 2025 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ- சீ

### 2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | 2025 ரூபா | 2024 ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 48,524,042 | 25,146,595 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 773,129,000 | 603,431,000 |
| முற்பணங்களை அறவிடல் | 18,761,465 | 14,037,703 |
| வைப்புக்களின் பெறுகை | 382,615 | 1,325,966 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **840,797,122** | **643,941,265** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 768,126,860 | 597,803,502 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 2,325,425 | 2,519,403 |
| மூலதனச் சொத்துகளின் புனரமைப்பு, மூலதன மாற்றங்கள், திறன் வளர்ப்பு மற்றும் பிற மூலதனச் செலவினங்கள் | 10,986,342 | 11,100,017 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 2,736,953 | 126,143 |
| நிறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 0.14 | 62.29 |
| முற்பணக் கொடுப்பனவு | 48,832,888 | 24,703,758 |
| வைப்புக் கொடுப்பனவு | 351,358 | 1,232,383 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **833,359,826** | **637,485,268** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **7,437,296** | 6,455,996 |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | 24,410 | 25,905 |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | **24,410** | **25,905** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 7,461,706 | 6,481,901 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **7,461,706** | **6,481,901** |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ) | **(7,437,296)** | **(6,455,996)** |
| தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ) | (0) | 0 |
| *நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்* | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | |
| பெற்ற நன்கொடைகள் | - | |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | - | - |
| *கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:* | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | (0) | - |
| **ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | (0) | - |

3

## 3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**அறிக்கையிடலின் அடிப்படை**

1) **தயார்படுத்தலின் நோக்கம்**

2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2025 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

3) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

4) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

2024 ஆண்டில் UNODC நிறுவனத்தினால் நன்கொடையாக கிடைக்கப்பெற்ற 50 கணினி உபகரணங்களுக்கான ரூ.19968568.50 தொகை மதிப்பீடு 2025 ஆண்டில் கணக்கில் பதிவு செய்யப்பட்டது.

6) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

7) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2025 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

* ஒரு குறிப்பிட்ட அறிக்கையிடல் நிறுவனத்திற்கு குறிப்பிட்ட பரிவர்த்தனைகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான தகவல்களை உள்ளடக்கலாம் மற்றும் மாதிரிப்படிவங்களில் தேவைக்கேற்ப திருத்தங்களைச் செய்யலாம். அந்த குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு தேவையான வெளிப்படுத்தல் "அறிக்கையிடலின் அடிப்படை" என்பதற்குக் கீழ் சேர்க்கப்படலாம்.

* அறிக்கையிடல் நிறுவனத்திற்கு தொடர்புடைய கணக்கியல் கொள்கைகள் மட்டுமே "அறிக்கையிடலின் அடிப்படை" இன் கீழ் வெளிப்படுத் தப்படவேண்டும்.

5

## 3.5 வருமானஅறவீட்டு செயற்திறன்

| ரூபா.000 | | | | | |
|---|---|---|---|---|---|
| வருமான குறியீடு | வருமானத் தலைப்பு | வருமானமதிப்பீடு | | வருமான அறவீடு | |
| | | அசல் மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை | இறுதிமதிப்பீடு% |
| | பொருத்தமற்றது | | | | |

## 3.6 ஒதுக்கீட்டு பயன்பாட்டு செயற்திறன்

| ஒதுக்கீட்டுவகை | மொத்த ஒதுக்கீடு | | உண்மையான செலவு | உண்மையான செலவு இறுதி ஒதுக்கீட்டின் % ஆக |
|---|---|---|---|---|
| | அசல் ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| ஆரம்ப ஒதுக்கீடு | 743,000,000 | 803,000,000 | 791,429,953 | 98.55% |
| மூலதனம் | 24,000,000 | 24,000,000 | 22,120,026 | 92.16% |

**3.7 நி.கூ 208ன் படி மற்றொரு அமைச்சின் திணைக்களத்தின் முகவராக இத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடு**

| தொடர் இல | ஒதுக்கீடு வழங்கப்பட்ட அமைச்சகம் / திணைக்களத்தின் பெயர் | ஒதுக்கீடு | | உண்மையான செலவு | உண்மையான செலவு இறுதி ஒதுக்கீட்டின் %ஆக |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| 1 | தேர்தல் ஆணையகம் | 2,736,953 | 2,736,953 | 2,736,953 | 100% |

**3.8 நிதி அல்லாத சொத்துக்களின் செயற்திறன் அறிக்கை**

| சொத்து குறியீடு | சொத்து குறியீட்டு விளக்கம் | பொருட் கணக்கெடுப்பின் படி 2025.12.31ல் உள்ளவாறான மீதி | நிதி நிலை அறிக்கையின் படி 2025.12.31ல் உள்ளவாறான மீதி | செயன்முறையில் உள்ளவேலை | முன்னேற்றம் %ஆக |
|---|---|---|---|---|---|
| 9157 | இயந்திர மற்றும் உபகரணங்கள் | 109,891,912 | 109,891,912 | - | 100% |

## 3.9 கணக்காய்வாளர் நாயத்தின் அறிக்கை

**ජාතික විගණන කාර්යාලය**
**தேசிய கணக்காய்வு அலுவலகம்**
**NATIONAL AUDIT OFFICE**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | JLO/F/DCBC/FS/04/2025 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2026 මැයි [illegible] දින |

ප්‍රජා පාදක විශෝධන කොමසාරිස්
ප්‍රජා පාදක විශෝධන දෙපාර්තමේන්තුව

**ශීර්ෂය 326 - ප්‍රජා පාදක විශෝධන දෙපාර්තමේන්තුවේ 2025 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(1) වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති සම්පිණ්ඩන වාර්තාව.**

---

**1. මූල්‍ය ප්‍රකාශන**

**1.1 තත්ත්වාගණනය කළ මතය**

